DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.123/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 5 | Caste | : | |
| Name | : | முனியசாமி | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 6th day of December 2022.
06.12.2022.

முதல் விசாரணை:-

1. நான் சேராந்தையில் வசித்து வருகிறேன்.விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐதெரியும். ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. கடந்த 22.09.2019-ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் சசிகுமாரும், ஜெயமுருகனும் கொத்தனார் வேலைக்காக இருசக்கர வாகனத்தில் சென்றபோது இராமேஸ்வரத்தில் இருந்து மேற்கு நோக்கி சென்ற வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்த நபர் ஒருவர் போன் மூலம் தகவல் சொன்னதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்றோம்.

2. அங்கு காயம்பட்ட சசிகுமாரை பார்த்தபோது அவருக்கு பின் பக்க தலையிலும், வலது காலிலும், இரத்தக் காயம் இருந்தது. பின்னர் அவர்களை ஆம்புலன்சில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர் மருத்துவமனை சென்ற 10 நிமிடத்தில் சசிகுமார் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.4 வரையுள்ள சாட்சிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 6, 7 எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சேராந்தை என்பது கடலாடி தாலுகா என்றால் சரிதான். அங்கிருந்து இராமநாதபுரம் வரவேண்டும் என்றால் எவ்வளவு நேரம் ஆகும் என்றால் பஸ்சில் வந்தால் 1 1/2 மணி நேரம் ஆகும். நாங்கள் வேனில் வந்தோம். வேனில் வந்ததை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் சம்பவ இடம் சென்று பாதிக்கப்பட்டவர்களை ஆம்புலன்சில் ஏற்றிவிட்டோம் என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. சம்பவ இடம் தெரியுமா என்றால் சம்பவ இடம் எந்த இடம் என்ற ஞாபகம் இல்லை. இறந்தநபர் உள்ளூர்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.123/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 6 | Caste | : | |
| Name | : | சுந்தரம் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 6th day of December 2022.
06.12.2022.

முதல் விசாரணை:-

1. நான் சேராந்தையில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும்.கடந்த 22.09.2019-ம் தேதி மதியம் 1 மணிக்கு கனி என்பவர் எனக்கு போன் செய்து சசிகுமார் என்பவர் வண்டியில் அடிபட்டுவிட்டதாக தகவல் சொன்னதன் பேரில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். நான் பார்த்த போது சசிகுமார் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. அ.சா.5 எனக்கு வேண்டியவர் என்றால் சரிதான். அதேபோல் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் வேண்டியவர்கள் என்றால் சரிதான். அதேபோல் பட்டியல் சாட்சி சதாசிவம் சொந்தக்காரர் என்றால் சரிதான். ஊரில் இருந்து மருத்துவமனைக்கு வரும் போது அன்று மணி 2.00 இருக்கும். ஊரில் இருந்து மினி பஸ்சில் வந்து அப்புறம் பஸ் மாறி இராமநாதபுரம் வந்தேன். சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. இறந்துபோன நபர் எங்கள் ஊர்காரர் வேண்டியவர் என்பதால் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.123/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 7 | Caste | : | |
| Name | : | சதாசிவம் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 6th day of December 2022.
06.12.2022.

முதல் விசாரணை :-

1. நான் சேராந்தையில் வசித்து வருகிறேன். மீன் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.2 ஆகும். கடந்த 22.09.2019-ம் தேதி நான் மீன் வாங்கிக்கொண்டு சென்றபோது விபத்து நடந்த இடத்தில் போலீசார் வந்து படம் வரைந்து விசாரித்துக்கொண்டிருந்தபோது சாட்சியாக கையெழுத்து கேட்டதன் பேரில் நான் கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலீஸ் விசாரணையில் மீன் வாங்க சென்று போய்விட்டு வருகிறேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கையெழுத்து கீழே தேதி இல்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் யார் தயார் செய்தார் என்றால் தெரியாது. போலீஸ் தயார் செய்தார்கள். இறந்துபோன நபர் எனது சொந்தக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் நேரடியாக தெரியும்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.123/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 8 | Caste | : | |
| Name | : | தர்மராஜ் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 6th day of December 2022.
06.12.2022.

முதல் விசாரணை:-

1. நான் சேராந்தையில் வசித்து வருகிறேன். விவசாயம் மற்றும் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.3 ஆகும். 2019-ம் வருடம் ஒருநாள் விபத்து நடந்த இடத்தில் போலீசார் வந்து படம் வரைந்து விசாரித்துக்கொண்டிருந்தபோது சாட்சியாக கையெழுத்து கேட்டதன் பேரில் நான் கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் சாட்சி சொன்னவர்கள் எல்லோரும் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு எழுதபடிக்க தெரியும். போலீசார் கையெழுத்து வாங்கும்போது சுமார் 01.00 மணி இருக்கும். எனக்கு இறந்த நபர் குறித்து போன் மூலம் யாரும் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மீன் வாங்கி செல்லும் போது பார்த்தேன். பார்வை மகஜரில் என்ன விபரம் எழுதியிருந்தது தெரியுமா என்றால் தெரியாது. இறந்த நபர் எனது ஊர்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எங்கள் ஊருக்கு 01.00 மணியளவில் தகவல் சொன்னேன்.